விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 310 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 08 சனிக்கிழமை (25.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கொக்குவில் படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல்




15ஆம் பக்கம் பார்க்க

## இஷாரா செவ்வந்தி இந்தியாவுக்கு தப்பிச் சென்ற படகு அராலியில் மீட்பு

### உதவிய குற்றச்சாட்டில் யாழில் இருவர் கைது தொடரும் விசாரணை மேலும் பலர் கைதாகலாம்

(யாழ்ப்பாணம்)

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற படகு யாழ்ப்பாணம் அராலிப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.



15ஆம் பக்கம் பார்க்க

## போர்க் குற்றங்கள் தொடர்பில்

# சர்வதேச விசாரணை அவசியம் இல்லை

### பாராளுமன்றில் பிரதமர் ஹரிணி



(கொழும்பு)

போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் இல்லை எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் மோ.சைக்கிளில் கஞ்சா கடத்தியவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் மோட்டார் சைக்கிளில் கேரளக் கஞ்சாவைக் கடத்திச் சென்ற இளைஞர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை சுழி

15ஆம் பக்கம் பார்க்க

## கொடிகாமத்தில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் - கெற்பேலிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் மீது

15ஆம் பக்கம் பார்க்க

## - இடமாற்றத்தில் அநீதி -

### கிளிநொச்சியில் ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



02ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

### இந்தியா விஜயம்



03ஆம் பக்கம் பார்க்க

## நாளை ஞாயிற்றுக்கிழமை

# வடக்கு மாகாணத்தில் 13 மணிநேர மின்வெட்டு

### மன்னாரில் மின் தடைப்படாது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் நாளை 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை

15ஆம் பக்கம் பார்க்க

## வங்கக்கடலில் தாழமுக்கம்

### காற்று, மழை தொடர்பில் எச்சரிக்கை

(கொழும்பு)

வங்கக் கடலில் தாழமுக்கம் உருவாகியுள்ளது. இதனால் பலத்த காற்றுடன் கனமழைக்கு வாய்ப்

02ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி சபைகளுக்கு வற் வரியை விடுவியுங்கள்

### யாழ்.மாநகர முதல்வர் மதிவதனி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகள் மூலம் கிடைக்கும் வற் வரியை சபைகளிற்கே விடுவிக்க வேண்டும் என யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மதிவதனி கோரிக்கை விடுத்துள்ளார்.



15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பல்வேறு பகுதிகளில் ஹெரோயினுடன் 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆறு பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

குறித்த ஆறு பேரிடமிருந்தும் ஏழு கிராம் ஹெரோயின் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

போதைப்பொருள் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிரதேச செயலாளராக திருமதி சிவகாமி உமாகாந்தன் நியமனம்



யாழ்ப்பாணப் பிரதேச செயலாளராக இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திருமதி சிவகாமி உமாகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே யாழ்.பிரதேச செயலாளராக இருந்த சா.சுதர்சன் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக நியமிக்கப்பட்டமையை அடுத்து திருமதி சிவகாமி உமாகாந்தன் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி சிவகாமி உமாகாந்தன் கரவெட்டி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பாதுகாப்பற்ற நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள்

## சஜித் காட்டம்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் இது ஒரு தீவிர பிரச்சினையாக கருதப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டிய அவர், வெலிகம பிரதேசசபைத் தலைவர், பொலிஸாரிடம் பாதுகாப்பு கோரிய போதிலும் அவருக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படாததாலேயே அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அற்ற சூழ்நிலைகளை எதிர்கொள்கின்றனர் எனச் சுட்டிக்காட்டினார். (ம-7)

# கிளிநொச்சி...

2026ம் ஆண்டு வடமாகாணக் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தில் கிளிநொச்சி ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் கிளிநொச்சி தெற்கு வலயம் முன்பாக நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குப் பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டி பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மாவட்டத்தில் பணிபுரியும் ஏனைய ஆசிரியர்களும் அதிபர்களும் கினிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளும் இணைந்து குறித்த முறையற்ற விதமாக மேற்கொள்ளப்பட்ட இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,316)

# வங்கக் கடலில்...

புள்ளது. எனவே இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை வழியாக மட்டக்களப்பு வரையான கரையோரத்திற்கு அப்பாலுள்ள ஆழமற்ற கடற்பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று (24) காலை 5.30 மணியளவில், தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் குறைந்த அழுத்தப் பகுதி உருவாகியுள்ளது. இந்த அமைப்பு அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற்று, மேற்கு-வடமேற்குத் திசையை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி மறு அறிவித்தல் வரும் வரை, அட்சரேகை 5 முதல் 18 வரையும், கிழக்கு தீர்க்கரேகை 80 முதல் 95 வரையும் உள்ள கடற்பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது அப்பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் உடன் அந்தக் கடற்பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-7)


கிழவன்காடு கலாமன்றத்தின்

## கண்ணீர்ப் பூக்கள்



எமது கலாமன்றத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் ஒழுங்காக நடனக் கலையினைப் பயின்று வருகின்ற முதனிலை மாணவிகளான யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை இறுதி வருட மாணவி செல்வி சுந்தரலிங்கம் சிந்துஜா மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நடனத்துறை மாணவி செல்வி சுந்தரலிங்கம் லக்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கலாமன்றத்தின் படப்பிடிப்பாளருமாகிய

**அமரர் கோணலிங்கம் சுந்தரலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவுத்துயர் அறிந்து அதிர்ச்சியடைந்துள்ள நாம் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத் தில்லைக்கூத்தன் திருவடிகள் சேரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (C-4183)

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ் கிளை



## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு
- துப்பரவுப் பணியாளர்கள்
- பூங்கன்று பராமரிப்பாளர்கள்
- சமையல் உதவியாளர்

தேவை. ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்.

தொடர்பு: 077 800 1214 (5728)



## விற்பனைக்கு

Forklift Komatsu 2 ton (petrol) வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 076 097 3121 (க)



## வேலையாட்கள் தேவை

கொடிகாமத்தில் அமைந்துள்ள fancy மற்றும் புடைவைக்கடைக்கு பெண் வேலையாள் தேவை.
- Age - 18 to 30, அருகில் உள்ளவர்கள் அதிகம் விரும்பத்தக்கது.
- அனுபவம் விரும்பத்தக்கது.
- Basic Salary - 24000/=

சாவகச்சேரியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள House Lighting Shop ற்கு ஆண் வேலையாட்கள் தேவை.
- Age - 18 to 23
- வெளிமாவட்டத்தவர்கள் அதிகம் விரும்பத்தக்கது (வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டத்தவர்கள்)
- உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

Note - Interview ற்கு வரும் போது NIC, G.S Character கொண்டு வர வேண்டும்

தொடர்புகளுக்கு - 077 811 8948 (5730)



## FORKLIFT வாடகைக்கு விடப்படும்

FORKLIFT வாகனம் மணித்தியால அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

CLAMP MODEL FORKLIFT



076 097 3121 (க)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை தம்பகாமம் வட்டாரத்திற்கான ஆதனங்களின் ஆவணங்கள் கோருதல்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையானது தம்பகாமம் வட்டாரத்திலுள்ள ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தம்பகாமம் கிராம அலுவலகத்திற்குட்பட்ட (KN/86) ஆதனங்களின் உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் கீழ்வரும் ஆவணங்களினை சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக அவற்றின் மூலப்பிரதிகளுடன் நிழற்படப் பிரதிகளையும் எதிர்வரும் 27.10.2025 ஆம் திகதி தொடக்கம் 07.11.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. காணி உறுதி
2. நில அளவைப்படம்
3. தேசிய அடையாள அட்டை
4. 30 வருடத் தோம்பு

சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. 25.10.2025 (C-4182)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், வடமராட்சி, பருத்தித்துறை, அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் அருகாமையில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 16 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு
- அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயம் 100m தூரம்.
- பருத்தித்துறை BUS நிலையம் 1 ½ K.m
- நெல்லியடி BUS நிலையம் 1 ½ K.m
- மேட்டுநிலம், நன்னீர் ஊற்று, குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ஒரு பரப்பின் விலை வீதி முகப்புடன் 10 இலட்சம் ரூபா.
- இரண்டாம் துண்டு 7 இலட்சம் ரூபா.
- 3 ஆம் துண்டு 5 இலட்சம் ரூபா.
- பார்வையிடும் நேரம் : காலை 08 : 00 - மாலை 06 :00

076 860 2770, 076 987 8617 (5731)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனை பட்டியலில் 5 மாணவர்கள் உள்ளடக்கம்

## சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**சிறைச்சாலைகளில் உள்ள தூக்கி லிடப்பட வேண்டியவர்களின் பட்டியலில் 5 பாடசாலை மாணவர்களும் உள் ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச் சாளர் ஜகத்வீரசிங்க தெரி வித்துள்ளார்.**



நாவலப்பிட்டியில் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு இத்தகவலை தெரி வித்த சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவிக்கை யில்,

பாரியளவிலான போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.

போதைப்பொருள் நாட்டின் எதிர்கால சந்ததியினரை அழி த்து வருகிறது. சிறைச்சாலை களில் 805 ஆண்கள் தூக்கி லிடப்பட உள்ளனர். இதே போன்று 21 பெண்களும் தூக் கிலிடப்படவேண்டிய பட்டியலில் உள்ளனர். 805 பேரில் 5 பாடசாலை மாணவர்களும் உள்ளனர்.

பாதாள உலக நடவடிக்கை களில் தெற்கு முதலிடத்தில் உள்ளது. படித்த ஒரு சமூகம் எவ்வாறு கூலிக்கு கொலை செய்யும் சமூகமாக மாறியுள் ளது என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை.

அவர்கள் எவ்வாறு பெரிய அளவில் போதைப்பொருட் களைக் கொண்டு வந்து நாட்டை அழிக்கும் நிலைக்குக் கொண்டு வந்தார்கள்? இதற் கெல்லாம் மூல காரணம் இந்த நாட்டில் பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல் காரர்கள்தான்.

அவர்கள் நிச்சயமாக தூக்கி லிடப்பட வேண்டும். அவர்கள் ஒரு தேசத்தையே அழிக்கி றார்கள்.

எனவே, பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர் கள் தூக்கிலிடப்பட வேண் டும். அது பாவமான செயல் அல்ல என அவர் தெரிவித்தார். (நி)

# போதைப்பொருள் பாவிப்போர் நாட்டில் அதிகரிப்பு

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு)

போதைப்பொருள் பாவிப் பவர்களின் எண்ணிக்கை இந்த வருடத்தில் அதிகரித் துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலா ளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

“2025 ஆம் ஆண்டின் கணிப்பீட்டின் படி ஹெரோ யின் பாவிப்போர் 120,000 மற்றும் ஐஸ் 140,000, கஞ்சா பாவிப்போர் 300,000 அதிகரித்துள்ளனர். போதை மாத்திரைகள் பாவிப்போர் 50,000 பேர் எனத் தெரிய வந்துள்ளது.

கடந்த காலங்களிலும் பெருமளவு போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட் டன. ஆனால் பரபரப்பாக்கப் படவில்லை. வரலாற்றில் இந்த அரசாங்கத்தின் காலத் திலேயே கொல்கலன் மூலம் போதைப்பொருட்கள் கொண்டு வரப்பட்டன.

எமக்குத் தெரிந்த வித்த் தில் கடல் மார்க்கமாகவே போதைப்பொருட்கள் கொண்டு வரப்பட்டன. போதைப்பொருள் குறை வடைந்தால் அதன் விலை கள் அதிகரிக்கப்படும். விநி யோகமும் முடக்கப்பட்டிருக் கும். ஆனால் அவ்வாறு ஒன்றும் நடக்கவில்லை என அவர் தெரிவித்தார். (நி)

# சஜித் இந்தியா விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நான்கு நாள் விஜய மாக நவம்பர் முதல் வாரத்தில் புதுடில்லி செல்கின்றார்.

தம்மோடு வேறு பிரதிநிதி கள் குழுவைக் கூட்டிச் செல் லாமல், எதிர்க்கட்சித் தலை வர் தனித்து புதுடில்லி செல் கின்றார் என்றும் தெரிவிக்கப் பட்டது.

அங்கு இந்திய உயர்மட்டத் தலைவர்களோடு அவர் பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபடுவார் என்றும் தெரிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பின்னர் பிரதமர்



ஹரிணி அமரசூரிய ஆகியோ ரைப் புதுடில்லிக்கு அழைத்துப் பேசிய இந்திய அரசு, இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இந்தியாவுக்கு அழைத்திருப்பது முக்கிய விடயமாகப் பேசப்படுகின் றது. (நி)

# பிரமிட்டில் ஈடுபட்ட எழுவர் கைது

(கொழும்பு)

பிரமிட் திட்டத்தை இயக் குதல், ஊக்குவித்தல் மற்றும் அந்தத் திட்டத்தை நிர்வகித்தல் ஆகிய குற்றச்சாட்டின் பேரில் ஏழு சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபருக்கு கிடைத்த தகவலின் அடிப்படை யில் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு வினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னரே இந்த நபர்கள் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 40 முதல் 64 வயதுக் குட்பட்டவர்கள் என்று.

ரத்மலானை, பன்னிப்பிட் டிய, கல்நெவ, ஹோகந்தர, பேரூதனை மற்றும் கொழும்பு 4 பிரதேசங்களைச் சேர்ந்த வர்கள் என்றும் குறிப்பிடப்பட் டுள்ளது.

நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தாயகம் திரும்பும் இலங்கையர்களை வரவேற்க அரசாங்கம் தயார்

## இந்திய ஊடகங்களிடம் தெரிவித்த பிரதி அமைச்சர்

(சென்னை)

இலங்கையில் இருந்து அகதிகளாக இந்தியாவில் இருக்கும் மக்கள் மீண்டும் தாயகம் திரும்பினால் அரசாங் கம் வரவேற்கத் தயாராகவுள்ள தாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் நடை பெறும் நிகழ்வொன்றுக்காக தமிழ்நாட்டுக்குப் பயணம் மேற் கொண்டுள்ள பிரதி அமைச்சர், அங்கு ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே இந்த விடயத் தைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கூறிய அவர்,

இலங்கை அரசு பொருளா தாரத்தில் சிக்கலான சூழலில் இருந்தபோது இந்தியா பல் வேறு உதவிகளைச் செய்துள் ளது. மலையக தமிழர்களுக்கு இந்திய சார்பில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய ஜனாதிபதி பதவியேற் றதும் இலங்கை வந்த இந்திய பிரதமர் பல்வேறு நிதி உதவி கள் உள்ளிட்ட உதவிகளை தொடர்ந்து செய்து வருகிறார்.

தற்போது பொருளாதார ரீதியில் இருந்து இலங்கை வேகமாக மீண்டு வருகிறது. நாட்டில் இலஞ்சம் முழுவதும் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு பிரதி நிதிகளின் செலவுகள் கட்டுப் படுத்தப்பட்டு வீண் விரயம் தவிர்க்கப்பட்டுள்ளது.

அரசியல் தலைவர்கள் சாதா ரண மக்களை போல் செயற் படுகின்றனர். இலங்கையில் இருந்த இரட்டை சட்டம் மாற்றி யமைக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்கள் ரணில் விக்கிரமசிங்க போன்ற வர்கள் தவறு செய்ததால் அவர் களைச் சிறையில் அடைக்கப் பட்டதன் பின் அனைவருக்கும் நீதி சமம் என்பதை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய ஒதுக்கீட்டில் வடமாகாணத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு ஏரா ளமான பணிகள் நடந்து வரு கிறது, சர்வதேச விளையாட்டு மையம் யாழ்ப்பாணம் பகுதி யில் அமைக்கப்பட்டு வருகி றது.

இலங்கை - இந்திய மீன வர் பிரச்சினையை ஒதுக்கி வைத்து மீன்வளம் கடல் வளம் குறித்து அரசு நடவ டிக்கைகளை எடுத்து வரு கிறது.

மீன்வளத்தைப் பாதிக்கும் வகையிலான திட்டங்களை தடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்தியா - இலங்கை என இரு நாடுகளும் அரசியல் ரீதியாக ஒற்றுமையாக உள் ளது.

இரண்டு நாட்டு அரசும் மீனவர் பிரச்சினையை பேசி முடிக்க நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறோம். இலங்கை - இந்தியா என இருநாட்டு மக் கள் உறவுகாரர்கள். ஏன் மீன வர் பிரச்சினையை மட்டும் வைத்து பகைமை உண்டாக்க வேண்டும்.

இலங்கை அனைத்து நாடு களுடனும் நட்புடன் உள்ளது. இலங்கையை சீனா ஆக்கிரமித் துள்ளதாக சொல்வதை அனைத் தும் பொய். சுயாதீனமான நாடாக இலங்கை உள்ளது.

இலங்கையில் இருந்து அக திகளாக இந்தியாவில் இருக் கும் மக்கள் மீண்டும் தாயகம் திரும்பினால் இலங்கை அர சாங்கம் வரவேற்கத் தயாராக உள்ளது.

இலங்கை மக்களின் கோரி க்கை குறித்து இரு நாட்டு அர சும் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 17 ஆண்டுகளுக்குப் பிறகு

# அடிலெய்டில் இந்தியா தோல்வி!

## தொடரை கைப்பற்றியது அவுஸ்திரேலியா

**இந்தியா-அவுஸ்திரேலியா இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 17 ஆண்டுகளுக்குப் பின்னர் அடிலெய்ட் மைதானத்தில் தோல்வியைச் சந்தித்துள்ளது.**





அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 ஒருநாள் மற்றும் 5ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதைத் தொடர்ந்து 2 ஆவது ஒருநாள் போட்டி, அடிலெய்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பாட்டம் ஆடிய இந்திய அணி, 50 ஓவர்கள் முடிவில், 9 விக்கெட்களை இழந்து, 264 ஓட்டங்கள் குவித்தது.

இந்தியா தரப்பில் அதிகபட்சமாக, ரோஹித் சர்மா 73 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலிய வீரர் ஆடம் ஜாம்பா 4 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

தொடர்ந்து, 265 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, 46.2 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து, 265 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய தரப்பில் அதிகபட்சமாக, ஷார்ட் 74 ஓட்டங்களும், கூப்பர் கோனோலி 61 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை அவுஸ்திரேலியா அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

அடிலெய்டில் 17 ஆண்டுகளுக்கு பின்னர், ஒருநாள் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்துள்ளது.

சுப்மன் கில் இந்திய ஒருநாள் அணியின் அணித் தலைவராக பொறுப்பேற்ற 2 போட்டிகளிலும் இந்திய அணி தோல்வியடைந்துள்ளது.

3 ஆவது ஒருநாள் போட்டி இன்று சனிக்கிழமை சிட்னியில் நடைபெற உள்ளது. (3)

## முதல் முறையாக பாகிஸ்தான் மண்ணில் சரித்திரம் படைத்த தென்னாபிரிக்கா




பாகிஸ்தான்-தென் ஆபிரிக்கா அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் ராவல்பிண்டியில் கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகியது. இதில் முதலில் விளையாடிய பாகிஸ்தான் 333 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

கப்டன் ஷான் மசூத் 87 ஓட்டங்களும் சவுத் சகீல் 66 ஓட்டங்களும் அப்துல்லா ஷபிக் 57 ஓட்டங்களும் எடுத்தனர். தென் ஆபிரிக்க சுழற்பந்து வீரர் கேசவ் மகாராஜ் 7 விக்கெட் வீழ்த்தினார்.

இதனையடுத்து தென் ஆபிரிக்கா அணி முதல் இன்னிங்சில் 404 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக முத்துசாமி 89 ஓட்டங்களும், ஸ்டப்ஸ் 76 ஓட்டங்களும், ரபாடா 71 ஓட்டங்களும் எடுத்தனர். பாகிஸ்தான் தரப்பில் ஆஷிப் அப்ரிடி 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனையடுத்து 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக அமைந்தது. 16 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்தது. பாபர் அசாம் மட்டும் நிலைத்து ஆடி அரை சதம் கடந்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 138 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால் தென் ஆபிரிக்காவுக்கு 72 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து விளையாடிய தென் ஆபிரிக்கா அணி 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 73 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது. 2 ஆவது டெஸ்ட்டில் வெற்றி பெற்றதன் மூலம் 18 வருட டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் முறையாக பாகிஸ்தான் மண்ணில் முதல் வெற்றியை தென் ஆபிரிக்கா அணி பதிவு செய்து [illegible] சாதனை படைத்துள்ளது. (3)

## இறுதிப்போட்டியில் சுருண்ட மேற்கிந்திய தீவுகள்; ஒருநாள் தொடரை வென்று பங்களாதேஷ் அசத்தல்

மேற்கிந்திய தீவுகள் அணி 3 ரி-20, 3 ஒருநாள் போட்டியில் விளையாடுவதற்காக பங்களாதேஷிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அதன்படி முதலில் இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்றது.

முதல் ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணியும் 2 ஆவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் வெற்றி பெற்று ஒருநாள் தொடர் 1-1 என சமனில் உள்ளது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையேயான 3 ஆவது ஒருநாள் போட்டி டாக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி துடுப் பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத் தாடிய பங்களாதேஷ்அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்களைஇழந்து 296 ஓட்டங்களை குவித்தது. அதிகபட்சமாக சவுமியா சர்க் கார் 91 ஓட்டங்களும், சையிப்ஹசன் 80 ஓட்டங்களும், [illegible] 44 ஓட்டங்களும் எடுத்தனர். மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் அகேல் ஹோசைன் 4 விக்கெட்டும், அலிக் அதனேஸ் 2 விக்கெட்டும் கைப்பற்றினர். இதையடுத்து, 299 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் அணி களமிறங்கியது. பங்களாதேஷ் அணியினரின் துல்லிய பந்துவீச்சில் சிக்கி மேற்கிந்திய தீவுகள் அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. இறுதியில், மேற்கிந்திய தீவுகள் அணி 30.1 ஓவரில் 117 ஓட்டங்களுக்கு ஆட்டமி ழந்தது. இதன் மூலம் 179 ஓட்டங்கள் வித் தியாசத்தில் பங்களாதேஷ் அபார வெற்றி பெற்றது. அத்துடன் ஒருநாள் தொடரை 2-1 என கைப்பற்றி அசத்தியது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்கள் தொடர்பில்

## சர்வதேச விசாரணை அவசியம் இல்லை

## மீண்டும் அரசாங்கம் வலியுறுத்து

(கொழும்பு)



**போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் இல்லை என அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மொழிபோல வினாக்களுக்குப் பதில் வழங்கும் போது, பிரதமர் ஹறிணி அமரசூரிய இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் உடன்படவில்லை எனவும் பிரதமர் தெரிவித்தார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதமர், அந்த வாய்ப்பை பயன்படுத்தி, நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வைத் தேசிய நெறிமுறைகளினூடாக உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வெளிப்புற நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் எனவும், அந்த செயன்முறையானது, உள்ளக செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்களின் அடிப்படையிலேயே சர்வதேச விசாரணைகளை அர சாங்கம் எதிர்ப்பதாகவும் பிரதமர், பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்தவகையில் நம்பகமான உள்நாட்டு பொறிமுறையினூடாக, பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (நி)

## சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

புதிய சோனகதெரு ஜே/88 இன் முதியோர் சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புதிய சோனகதெரு ஜே/88 கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலக திட்டமிடல் பிரதிபணிப்பாளர் ந.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. ஓமேஸ்காந் மேரி ஜென்சிகா, யாழ்ப்பாணம் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.வக்ஷினி சூரியகுமார், யாழ்.பிரதேசமட்ட முதியோர் சங்கத்தலைவர் நா.சுந்தரராசா, யாழ். மாநகரசபை 10 ஆம் வட்டார உறுப்பினர் செ.மது சிகான், யாழ்.மாநகர சபை உறுப்பினர் ப.வசீகரன், ஜே/88 புதிய சோனக தெரு அலுவலர் திருமதி த.கீர்த்திகா, ஜே/88 புதிய சோனக தெரு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத் தர் க.சுதாகரன் மற்றும் ஜே/88 புதிய சோனக தெரு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. எட் வின் ஜெயக்குமார் மேரிஸ்ரெலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## 51 ஆவது கட்டளைத் தளபதி-அரசாங்க அதிபர் சந்திப்பு



(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட் டத்தின் 51 ஆவது படை யணியின் கட்டளைத் தளபதியாக பொறுப் பேற்ற மேஜர் ஜெனரல் ராஷிக் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்றையதினம் மரியாதை நிமித்தம் அரசாங்க அதிபர் அலுவல கத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் மேல திக அர சாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர் ,உதவி மாவட்ட செயலாளர் ஆகியோரும் உடனிருந்தார்கள். (8-33)


**பணிப்பெண் தேவை**

இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(C-4179)

**077 436 6423**


## கந்தசஷ்டி நம் செருக்கு அடங்க முப்பொருளாகிய பதி, பசு, பாசம் உணர்ந்து திக்கரை முருகனை வழிபடுவோம்

ஆணவ மலத்தின் எண்ணிலாத சக்திகளுக்கு மூலமாயுள்ள செருக்கு அடங்கப் பெறாதவர்; எத்துணைப் புண்ணிய செயலையுடைய திருவருள் கைகூடப் பெறார்.

பெரிய ஆணவம்-சூரன்-மாயாமலம்-தாரகன்-கன்மமலம்-சிங்கனையும் அருள்மிகு முருகப்பெருமான் சூரன் முதலியோரை அழித்து நல்லுயிர்களை ஈடேற்றும் முறைமையை எடுத்துக்காட்டும் சூரன்போர் ஆகும். நாமும் மும்மலங்கள் நீங்கி தேவர்களுக்கு மீண்டும் விண்ணுலகை கொடுத்தது போல், நாமும் முருகனிடம் திருவடிவருள் பெறுவோம்.

முருகப்பெருமான் அம்பிகையிடம்

வேல் பெற்ற இடம்-திருச்சிக்கல்-144 பதி

இரண்டாம் திருமுறை -78 ஆவது சம்பந்தர் பாடியது

சிக்கல் சிங்காரவேலர்-பிரசித்த பெற்ற முருகன் கோயில்

**வானு லாவுமதி வந்துலவும்மதின் மாளிகை**
**தேனு லாவு மலர்ச் சோலைமல் கும் திகழ் சிக்கலுன்**
**வேலை வேளை விழித் திட்ட வெண்ணெப் பெருமானடி**
**ஞான மாக நினைவார் வினையாயின் நையுமே**

அம்பாள் வேல் நெடுங்கண்ணி இங்கு மலைமேல் அருள் மிகுவேலவர், சிக்கல் வெண்ணெய் பெருமான் சம்பந்தர் பாட்டும் பாடல் முடிவில் பெருமானை வழிபட்டால் **பாவம் அகலும், பிணி அகலும், வினை அகலும்** என்றே அறிதியிட்டுக் கூறுவதுடன் **சிக்கல் தீர இறைவனை வழிபடுவீர்.** நாம் சம்பந்தர் தேவாரம் ஓதி நம் அறியாமை, ஆணவம், அகங்காரம் நீங்கி திக்கரை முருகன் ஓர் அழகான அருள்மிகு கும்பாபிசேகம் காண்போம். அத்திருவடிகளை வணங்கி நம் வினையாவும் நைந்து அழியும்.

சிவபெருமானும், முருகப்பெருமானும் வேறல்லர்.

இதைச் சிவபெருமானே பார்வதிக்குக் கூறியதாகக் கந்தபுராணம் கூறுகிறது. 1070

**ஆதலின் நமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும் பேதகம் அகன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்**
**ஏதமில் குழவி போல் வான் யாவையும் உணர்ந்தான் சீரும்**
**போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்**

ஆதலால் ஆறுமுகம் எமது சக்தியே யாவான் அவனும் யாமும் வேறுபாடு உடையவர் அல்லோம். அவன் எம்மைப்போல் நீங்காமல் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கின்றான். அவன் இப்போது குற்றமற்ற குழந்தை போலத் தோற்றமளிக்கிறான். என்றாலும் அவன் **அனைத்தையும் அறிந்தவன். தன்னைப் போற்றுகின்றவர் களுக்குச் சிறப்பும் ஞானமும் அழியாத முக்தியும் வழங்கவல்லவன்.**

சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் அடியார் பெருமையையே கூறுகின்ற தொண்டர் புராணம்-144-திருநீற்றின் பெருமை அறிவோம்.

**மாசிலாத மணிதிகழ் மேனிமேல்**
**பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்**
**தேசினால் எத்திசையும் விளக்கினார்**
**பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்.**

அடியார்கள் குற்றமில்லாத தம் திரு மேனிமேல் பூசிய திருநீற்றின் தூய்மை போலவே உள்ளேயும் புனிதத் தன்மை வாய்த்தவர்கள். அவர்கள் தமது ஒளியினால் எல்லாத் திசைகளையும் ஒளி விளக்கம் செய்தனர். ஆதலால் அவர்கள் கூறுவதற்கரிய பெருமை வாய்ந்தவர்கள்.

நெற்றியில் திருநீறு சிவ-சிவ என அணிந்து சிவகதி பெறுவோம். திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சேக்கிழார் இன்னும் பலர் வலியுறுத்தியுள்ளார்கள்-சிவநீறு நாமும் திருநீற்றுப் பெருமையை உணர்வோம்.

கந்தபுராணம் மேற்கூறிய 1070 ஆவது பாட்டில் முருகன் எல்லாம் அறிந்தவன் நாம் ஆறு சஷ்டி நாளிலும் முருகனை அருணகிரி நாதரது திருப்புகழ் கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, திருவகுப்பு, சண்முக கவசம், கந்தசஷ்டி கவசம் ஓதி காரைநகர் திக்கரை முருகன், ஈழத்துச் சிதம்பரம் ஆலயங்கள் கும்பாபிஷேகம் நடைபெற பிரார்த்திப்போம். முருகன் சூரபத்மனுக்கு அசுரக்குணம், அகங்காரம் நீக்கி தமக்கென மயில் வாகனமாக்கினார். அதுபோல் அவரது அருளால் நமது அசுரக்குணங்களையும் அகங்காரங்களையும் நீக்கி அடியார்கள் உள்ளத்திலும் ஆலயத்திலும் முன்னோர் இறைவனை அமைத்த இடத்திலும் அமைத்து தடைகளை அகற்றி அருளுவார்.

அருணகிரிநாதர் அருணைத் திருக்கோயிலின் கோபுரத்தில் இருந்து முருகா! முருகா! முருகா! என குதித்தவரை முருகன் தனது கரங்களில் தாங்கிப் பிடித்து அஞ்சவேண்டாம் என அபயம் அளித்தும் காட்சி கொடுத்தும் "அருணகிரி" என்னும் நாதன் பட்டத்தை அளித்தும் திருவடி தீட்சை செய்தும்; அவரது நாவில் தமது ஆறெழுத்துப் பொறித்து அவரது வினையை ஓட்டி முத்தமிழை ஊட்டினார்.

அந்த முத்தமிழ் தந்த திருப்புகழ், கந்தர் அந்தாதி மற்றும் அருள்மிகு திருப்பாடல்களை ஓதி நமது மனதில் உள்ள அழுக்கு, அகங்காரம், ஆணவம், கன்மம், மாயை என்பவற்றை அகற்றி நம் நலங்களையும் குடும்ப அமைதியையும் ஆலய அமைதியையும் கந்தன் தருவான். வேண்டும் வரமனைத்தும், அல்லல் வரும்போது அபயகரம் அளிப்பான். ஆண்டுகொண்டு எந்நாளும் அன்பர்களைக் காப்பான்.

நாம் கந்தசஷ்டி காலத்தில் ஆசாரமாகவும் திருநீறு நெற்றியில் பரந்து அணிந்தும் கந்தபுராணம், திருப்புகழ், கந்தர் அநுபூதி மற்றும் முருகன் வழிபாட்டு பதிகங்களை ஓதி மும்மலங்கள் நீங்கியும் முப்பொருளாகிய பதி, பசு, பாசம் உணர்ந்து பசுவாகிய நாம் பாசம் நீங்கி பதியாகிய இறைவன் திருவடியை அடைந்து பேரருள் பெறுவோம்.

இந்த சமய ஆலோசனைகளை, அறிவுரைகளை பிரதிகள் எடுத்தோ அல்லது பத்திரிகையில் இருந்து வேறாக்கி எடுத்தோ ஆவணப்படுத்தி உங்களது வருங் காலச் சந்ததிக்கு கையளித்தால் முருகப் பெருமானுடைய திருவருள் கடாட்சம் உங்களது ஈரேழு தலைமுறைக்கும் துணையாய் நின்றருளும்.

(C-4178)


க.கு.க.சிவபாலன் (k.k.k)
சிவநெறிப்புரவலர்,
பாஞ்ச சண்யம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரு.துறை புதிய சந்தையில் போதிய இடவசதிகள் இல்லை

## வியாபாரிகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினர் மற்றும் மரக்கறி சந்தை வியாபாரிகள் இணைந்து பருத்தித்துறை நகரில் நேற்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.**




நகரின் மையப் பகுதியில் அமைந்திருந்த மரக்கறிச் சந்தையை, மீன் சந்தை வீதியில் புதிதாக கட்டடம் ஒன்றை நிர்மாணித்து அங்கு வியாபாரிகளை பருத்தித்துறை நகர சபை செயலாளர் தலைமையில் மாற்றம் செய்து வைக்கப்பட்டது.

குறித்த புதிய சந்தைக் கட்டடத்தில் போதிய இடவசதிகள் இல்லை எனவும் மழை நேரங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் அதனால் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மரக்கறி வியாபாரிகள் நகரசபை தவிசாளர் உள்ளிட்டோரிடம் மகஜர்களை கையளித்திருந்தனர்.

அது தொடர்பில் நகரசபை அமர்வின் போது நிபுணர் குழு ஒன்று உருவாக்கப்பட்டு ஆராய்ந்து முடிவெடுப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் இது வரை தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்து மரக்கறி வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (8-33)



“சுயகவிதைப்படைப்பு இலக்கியம்” 2025 இற்கான அரச இலக்கிய விருதை வேரினை நோக்கிய விழுதுகள் என்ற நூலிற்காக ஓய்வுபெற்ற அதிபரும் ஆசிரியருமான நாக.சிவசிதம்பரம் பெற்றுக்கொண்டார்.

# அறிவுத்திருக்கோவிலில் யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்ட்டு பிரச்சினை தீர, எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே. ஆர். முனிரத் தினம் வழங்குவார்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

# கரவெட்டியில் பனம் விதைகள் நாட்டல்


(அராலி)

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில், புளூஸ் அறக்கட்டளை மற்றும் புளூஸ் விளையாட்டு கழகத்தினரின் நிதி அனுசரணையுடன், கரவெட்டி கிழக்கு ஜே/368 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட இடங்களில் பனம் விதைகள் நாட்டும் நிகழ்வானது ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

30 ஆயிரம் பன மரங்களை உருவாக்கும் நோக்குடன், அண்மையில் அமரத்துவம் அடைந்த சமூகசேவையாளர் கணபதிப்பிள்ளை கந்தையா ஞாபகார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயானந்தம் ஜெகோபி, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் அ.அகஸ்ரின், வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெ.கலைச்செல்வி, ஜனநாயக போராளிகள் கட்சி உறுப்பினர்கள், பொது மக்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (8-104)

# யாழில் கொட்டப்படும் கழிவுகளால் மக்கள் அசௌகரியம்



(அராலி)

யாழ்ப்பாண பிரதான அங்காடி கடைகள் அமைந்த இடமான கந்தப்பசேகர வீதி, பழைய கரன் தியேட்டர் அருகாமையில் உணவுக்கழிவுகள் கொட்டப்படுவதால் அங்கு துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மாநகர சபை உறுப்பினர்களான பிரதி மேயர் தயாளன், சாருஜன் மற்றும் சதீஸ் ஆகியோர் குறித்த இடத்திற்கு நேரில் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இவ் விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கையாக கழிவுகள் அகற்றப்பட்டு, காணி உரிமையாளர்கள் இல்லாத விடத்து மாநகரசபையால் சுற்றி வர வேலிஅமைத்து, கண்காணிப்பு கமரா மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள மாநகரசபை தீர்மானித்துள்ளது. (8-104)

# தோட்டக்காணியில் வெங்கணாந்தி பாம்பு!



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மந்துவில் பகுதியில் தோட்டக்காணியில் வெங்கணாந்தி பாம்பு ஒன்று எதனையோ விழுங்கிய நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை தோட்டக்காணியினை அதன் உரிமையாளர் துப்பரவு செய்து கொண்டிருந்த போது, இந்த வெங்கணாந்திப் பாம்பினைக் கண்டுள்ளார்.

.எதையோ விழுங்கிய நிலையில் அசைய முடியாமல் அந்தப் பாம்பு தடுமாறிக் கொண்டிருப்பதை அவதானித்த உரிமையாளர் உடனடியாக முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளார். அதனையடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்கு சென்று பாம்பை பாதுகாப்பாக மீட்டு வேறு பகுதியில் விடுவித்துள்ளனர்.

தற்போது மழைக்காலம் நிலவுவதால் பாம்புகள் அடிக்கடி வெளிப்புற பகுதிகளுக்கு செல்லக்கூடிய வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றன. எனவே பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும் தோட்டங்களிலும் அவதானமாக இருக்குமாறு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (8-299)

# புலமைத்துவக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அரசகரும மொழிகள் திணைக்களம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்தும் "தமிழ் மொழியின் வரலாற்று முக்கியத்துவமும் கலாசாரப் பெறுமதியும்" எனும் புலமைத்துவ கலந்துரையாடல்- I இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் தகைசார் விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், அரசகரும மொழிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் திலக் நந்தன கெட்டியாராச்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# யாழில் பலத்த காற்று இரண்டு குடும்பங்கள் பாதிப்பு

(அராலி)

நிலவும் மழையுடன் கூடிய காற்று காரணமாக யாழில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த அறுவர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/45 கிராம சேவகர் பிரிவில் பலத்த காற்று காரணமாக ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த அறுவர் பாதிக்கப்பட்டுள்ளனர். (8-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலியாக திரியும் கால்நடைகள் உரிமையாளர்களுக்கு 2500 ரூபா தண்டம்

## தவிசாளர் சுரேன் தெரிவிப்பு

(அராலி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட முகமாலை தொடக்கம் ஆனையிறவு வரையிலான பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் திட்டங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை முன்னெடுத்து வருவதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுப் போக்குவரத்து வீதிகளில் திரியும் கட்டாக்காலி கால்நடைகளை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பிடித்து அகற்றும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு அவர்கள் பிடிக்கும் ஒரு கால்நடைக்கு தலா 2500 ரூபா வரையான தண்டப்பணத்தை செலுத்திய பின்னரே கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளை பெற்றுக்கொள்ள முடியும். எனவே இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு பண்ணையாளர்கள் தமது கால்நடைகளைப் பாதுகாப்புடன் பராமரித்து, பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் செயற்பட வேண்டும்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளால் அண்மையில் அதிகளவான விபத்துக்கள் ஏற்பட்டன. விபத்துக்களை கட்டுப் படுத்துவதற்காகவே இவ்வாறான செயற்பாடுகளில் நாம் ஈடுபட்டு வருகிறோம்.

தற்போது விதைப்புக் காலம் என்பதால் கிளிநொச்சி மற்றும் ஏனைய பிரதேசங்களில் இருந்து பண்ணையாளர்கள் அதிகளவான கால்நடைகளை பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லைக்குள் கொண்டு வருவதை அவதானிக்க முடிந்தது.

கால்நடைகளுக்கு அதிகம் நோய்கள் பரவும் காரணத்தால் இனி வரும் காலங்களில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை எல்லைக்குள் வேறு இடங்களில் இருந்து வரும் கால்நடைகளை அனுமதிப்பதில்லை என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச செயலக அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் எடுககப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், சபையின் எலலைக்குள் வரும் கால்நடைகளுக்கும் தண்டப்பணம் அறவிட்டு கால்நடைகளை கட்டுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். எனவே ஏனைய பிரதேச காலநடை வளர்ப்பாளர்கள் மற்றும் பண்ணை யாளர்கள் இவ்விடயங்களை கவனத்தில் கொள்ளுமாறு தெரிவித்தார். (8-104)

# முச்சக்கரவண்டி தரிப்பிடத்திற்கு மேற்கூரை அமைக்குக

(கரணவாய்)

முச்சக்கரவண்டித் தரிப்பிடத்திற்கு மேற்கூரை அமைத்து கொடுப்பது உள்ளிட்ட அடிப் படை பிரச்சினைகளுக்கு காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை நகர் முச்சககரவண்டி சங்கத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை நகர் பகுதியில் இயங்கி வரும் முச்சக்கர வண்டி சங்கத்தினர் நீண்டகாலமாக ஒழுங்கு முறையான தரிப்பிடமின்றி பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை நகரசபை செயலாளர், தவிசாளர் உள்ளிட்டோருக்கு கடந்த காலங்களில் பல தடவைகள் கடிதம் மூலமும் நேரிலும் தெரியப்படுத்தப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனவே நீண்டகாலமாக நீடித்து வரும் இப்பிரச்சினைக்கு இனியும் தாமதிக்காது உரிய நடவடிக்கை எடுக்குமாறு முச்சக்கர வண்டி சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-60)

# வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாணத்தின் சிறந்த தொழில்முனைவோர்களை அடையாளம் கண்டு கௌரவிக்கும் "வட மாகாண தொழில்முனைவோர் விருதுகள்-2025" நிகழ்வானது தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வட மாகாணத்தின் தொழில் முனைவோருடைய திறன்கள், அவர்களின் புத்தாக்கங்கள், தலைமைத்துவம் மற்றும் பொருளாதார பங்களிப்புக்கள் போன்றவற்றை பாராட்டுவதோடு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து, சிறந்த தொழில் முனைவோரை தேசிய மட்டத்தில் அடையாளம் காணப்படுவதை உறுதி செய்வதோடு பெண்கள், இளைஞர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றோரின் தொழில் முயற்சிகளுக்கு தேசிய ரீதியிலான அங்கீகாரங்களை பெற்றுக் கொடுப்பதே இவ் விருதுகளின் பிரதான நோக்கமாகும்.

வடமாகாண தொழில் முனைவோர் விருதுகள்-2025 இல் பெண் தொழில்முனைவோர், இளம் தொழில் முனைவோர், வேளாண்மை, உணவு சார் உற்பத்திகள், சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, மீன்பிடி, கல்வி, ஏற்றுமதிகள், கட்டிட நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு, கைவினை மற்றும் படைப்புத் துறை உள்ளிட்ட 16 பிரிவுகளில் மொத்தம் 33 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

எனவே வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள்-2025 இற்கான விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து உடனடியாக சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் தொழில்துறை மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.


பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தையும் ஆவணங்களையும் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

அனுப்பவேண்டிய முகவரி, Chamber of Commerce and Industries of Yarlpanam, No-63, Nallur Cross Road, Nallur, Jaffna .

விண்ணப்பப் படிவத்தையும் வழங்கப்பட உள்ள விருதுகளுக்கான பிரிவுகளையும் பதிவிறக்கம் செய்வதற்கு https://drive.google.com/drive/folders/16dSwxbKRisGsR6yZ1SE_JKvYx4vacWOG?usp=drive_link என்ற இணையத்தள முகவரியைப் பார்வையிடவும். (8)

# மரண அறிவித்தல்

## பேரம்பலம் கந்தசாமி (புத்தா)



சாவகச்சேரி, சரசாலை வடக்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கந்தசாமி அவர்கள் 23.10.2025 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம்-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம்-பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான தவமணி, சிவசுப்பிரமணிம் (SPS மணியம்) ஆகியோரின் அன்பு சகோதரரும், சுதர்சன், சுசித்திரா காலஞ்சென்றவர்களான பிரபாகர், சகிதா ஆகியோரின் அன்புத்தந்தையும், நவிலகுமாரன், ரஜிதா, வினோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருபன், லக்ஷா, ரிவிசா, ஜெனிஸ்கா, கரிகாலன், விதுஜன், சந்தோஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிக்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.
T.P: 076 874 9221

தோற்றம்
17.12.1949

மறைவு
23.10.2025

(1673)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்


# ஆந்திராவில் தீப்பிடித்
# 25இற்கும் மேற்பட்டோர் உ

(டில்லி)•••••••••••• ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூல் மாவட்டத்தில் உள்ள சின்னத்தேகூர் அருகே நேற்று அதிகாலை தனியார் சொகுசு பேருந்து ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் 25இற்கும் மேற்பட்டோர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# இஸ்ரேல் அமெரிக்காவின் பாதுகாப்பு மண்டலம் அல்ல!

## அமெரிக்காவுக்கு எதிராக கருத்து வெளியிட்ட நெதன்யாகு



(ஜெருசலேம்)

இஸ்ரேலின் பாதுகாப்பு விவகாரங்களை அந்த நாடே முடிவு செய்யும் என்றும், அது அமெரிக்காவின் பாதுகாப்பு மண்டலம் (புரோடக் டரேட்) அல்ல என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்

காசாவில் நடை முறையில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் போர் நிறுத்தம் குறித்து, அந்த நர்ட்டு துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸுடன் விவாதிப்பதற்கு முன்னதாக, இந்தக் கடுமையான கருத்தை நெதன்யாகு வெளியிட்டார்.

காசாவில் நிறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் சர்வதேச பாதுகாப்பு படையினர், அந்தப் பகுதியில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தும் திறனைக் குறைக்கலாம் என்று இஸ்ரேலில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

அந்த அச்சத்தைப் போக்கும் வகையில் நெதன்யாகு இவ்வாறு கூறியுள்ளதாகக் கூறப்படுகிறது. (நி)

# அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்து

## 40 பேர் உயிரிழப்பு

(துனிசியா)

பொருளாதாரம் மற்றும் சிறந்த வாழ்வாதாரத்தை நாடி ஐரோப்பிய நாடுகளுக்குச் சட்டவிரோதமாகக் கடல் வழியாகப் பயணித்த 40 பேர் படகு விபத்தில் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த இந்த அகதிகள், மத்திய தரைக்கடல் பகுதியில் துனிசியா அருகே பயணித்தபோது இந்த சோகச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.



ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 70இற்கும் மேற்பட்டோரை ஏற்றிச் சென்ற ஒரு படகு, மத்திய தரைக் கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குப் புறப்பட்டது.

துனிசியா நாட்டின் மஹ்தியா நகர் அருகே நடுக்கடலில் சென்று கொண்டிருந்த போது, எதிர் பாராதவிதமாக அந்தப் படகு விபத்துக்குள்ளாகி கவிழ்ந்தது.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த துனிசியா கடற்படையினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த மோசமான படகு விபத்தில் சிக்கி 40 பேர் உயிரிழந்தனர். கடலில் விழுந்தவர்களில் பலர் மாயமாகியுள்ள நிலையில், அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

உயிருடன் மீட்கப்பட்ட அகதிகள், துனிசியாவில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் சட்ட விரோதமாகவும், அபாயகரமான முறையிலும் மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அபாயகரமான பயணங்களின் போது அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு அகதிகள் உயிரிழப்பது தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (நி)

# காசா
# ஐ.நா



(வோஷி

போர்நிறு
படுத்தப்பட்
வாரங்கள்
துள்ள நில
வில் பசி நெ
"பேரழிவை
வதாக, ஐக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## த்து எரிந்த பேருந்து
## ர் உடல்கருகி உயிரிழப்பு!





ஹைதராபாத்திலிருந்து பெங்களூரு நோக்கி சுமார் 20 பயணிகளுடன் சென்ற குறித்த பேருந்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் எதிர் திசையில் வந்த மோட்டர் சைக்கிளுடன் மோதுண்டு தீப்பிடித்ததாக "த இந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

விபத்தினை அடுத்து பேருந்தின் முன்பக்கத்திலிருந்து உடனடியாக தீப்பிழம்புகள் எழுந்து, வேகமாகப் பரவி, எரிபொருள் தொட்டி வெடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அனர்த்தத்தில் மேலும் பலர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக கர்னூல் அரசு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தீ விபத்தில் பேருந்து முற்றிலுமாக எரிந்து நாசமானது.

தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன் என்று கூறியுள்ளார்.

மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 நிதியுதவியும் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்தார். (நி)

## நியூசிலாந்தில் கடும் காற்று!

- 90 ஆயிரம் வீடுகளுக்கு மின் துண்டிப்பு
- சுமார் 100 விமான சேவைகள் ரத்து



(வெலிங்டன்)

நியூசிலாந்தில் மணிக்கு 155 கி.மீ வேகத்தில் வீசும் பலத்த காற்று காரணமாக சுமார் 90,000 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், அதிகாரிகள் 100இற்கும் மேற்பட்ட விமான சேவைகளை இரத்து செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னதாக கேன்டர்பரி மற்றும் வெலிங்டன் உள்ளிட்ட மத்தியப் பகுதிகளில் நியூசிலாந்து அதிகாரிகள் அரிய சிவப்பு காற்று எச்சரிக்கைகளை வெளியிட்டனர்.

எனினும், பின்னர் அந்த எச்சரிக்கை நீக்கப்பட்டது. மக்கள் வீட்டிற்குள்ளேயே இருக்கவும், பயணத்தைத் தவிர்க்கவும் மேலும் மின்சாரம் மற்றும் தகவல் தொடர்புத் தடைகளுக்குத் தயாராகவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மின்வெட்டு பெரும்பாலும் தெற்குத் தீவில் உள்ள வீடுகளைப் பாதித்ததாகத் தெரிகிறது, இருப்பினும் மின்சாரம் படிப்படியாக மீட்டெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

சில இடங்களில், வீடுகளின் கூரைகள் கிழிந்து விழுந்துள்ளதாகவும், மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் சாய்ந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

வெலிங்டனில் ஒரு மரக்கிளை வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மின்வெட்டு பெரும்பாலும் தெற்குத் தீவில் உள்ள வீடுகளைப் பாதித்து வருவதாகத் தெரிகிறது. இருப்பினும் மின் விநியோகம் படிப்படியாக மீட்டெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.(நி)

## காசாவில் பேரழிவை ஏற்படுத்தும் பசி நெருக்கடி
## ஐ.நா சுகாதார நிறுவனம் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

போர்நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டு இரண்டு வாரங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், காசாவில் பசி நெருக்கடியானது "பேரழிவை" ஏற்படுத்துவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், மனிதாபிமான விநியோகங்களைத் தடுப்பதை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் எனச், சர்வதேச உதவிக் குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முற்றுகையிடப்பட்ட பகுதிகளுக்குள் கொண்டு செல்லப்படும் பொருட்கள் அங்கு வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனவும் உதவிக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், பாலஸ்தீனப் பகுதிக்குள் செல்வதற்கு இரண்டு வழிகள் மாத்திரமே திறக்கப்படுவதால், உதவிக் குழுக்களின் நாளாந்த இலக்கை அடையமுடியாத நிலை காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

இதன் அடிப்படையில், நிலைமை பேரழிவைத் தரக்கூடியதாகவே உள்ளது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

காசாவில் கர்ப்பிணிப் பெண்கள் உட்பட மொத்த சனத்தொகையில் கால்வாசியினர் பட்டினியால் வாடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஊட்டச்சத்து குறைபாடு தாய்மார்களை மட்டுமன்றி, புதிதாகப் பிறந்த குழந்தையின் மீது தலைமுறை தலைமுறையாக விளைவுகளை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் சுற்றிவளைப்பு
# 3,553 பேர் கைது!



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஒக்டோபர் 17 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப் பொருட்களுடன் 3,553 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, ஹெரோயின் போதைப்பொருளுடன் 1222 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 1212 பேரும், ஹேஷ் போதைப் பொருளுடன் 43 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 947 பேரும், கஞ்சா செடிகளுடன் 42 பேரும், போதை மாத்திரைகளுடன் 75 பேரும், சட்டவிரோத சிகரெட்டுகளுடன் 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1983-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
10இல்செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, Pollice Officer
எதிர்பார்ப்பு:தகுதியான பெண் (மனைவி இறப்பு)
தொ.இ: B/16175

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: ரோகினி
7இல்செவ்
உயரம்- 5'8"
தகைமை/தொழில்-BSC, Operation Executive Logistics (Dubai)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16177

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
உயரம்:5'8"
தகைமை/தொழில் Diploma, Technician (சுவிஸ்)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16178

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-O/L, Driver (Kuwait)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16179

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:மகம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: A/L, Driver (Australia)
எதிர்பார்ப்பு: only Australia
தொ.இ: B/16180

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி-பா-5 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Dip in English, Aari Work
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16046

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
7இல்செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Nursing Course
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Canada)
தொ.இ: G/16048

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-விசாகம்
தகைமை/தொழில்: Degree, Work
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Only UK)
தொ.இ: G/16050

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
7இல்செவ்
கி.பா -52
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc, PHD, Data Scientist
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16051

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:அனுசம்
7இல்செவ்
கி.பா - 48
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc, MSc, Project Engineer(USA)
எதிர்பார்ப்பு: Engineer, IT
தொ.இ: G/16055

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 468



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நன்மையும் தீமையும்!

ஒருவர் நமக்கு நல்லது செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை நாம் ரொம்ப நாள் நினைத்துக்கொண்டே இருப்பதில்லை.

ஆனால் அவரே நமக்கு ஒரு கெடுதல் செய்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை அவ்வளவு சுலபமாக மறந்துவிட மாட்டோம்.

என்றைக்குப் பழிவாங்கலாம் என்று காத்துக்கொண்டிருப்போம்.

சுவாமி சிவானந்தர் ஒரு கதை சொல்லி இதை விளங்க வைக்கிறார்.

ஒரு கிராமத்திலே ஒரு ஆள் இருந்தான். விவசாயம் தான் தொழில், அவனுக்கு ஒரு பிள்ளை. ஒரே பிள்ளை என்பதனாலே ரொம்பப் பிரியம். ஒருநாள் அந்த பிள்ளையை ஒரு பாம்பு கடித்துவிட்டுது. அவன் இறந்துவிட்டான்.

மகனை இழந்துட்டோம் என்று தெரிந்ததும் அவனுக்கு பயங்கர கோபம் அந்த பாம்பு மேலே.

உடனே ஒரு கோடாரியை கையிலே எடுத்துக்கொண்டான்.

அந்த பாம்பைத் தேடிப் பிடித்து அதுமேலே ஓங்கி ஒரு போடு போட்டான்.

அவ்வளவுதான். அந்தப் பாம்புடைய வால் துண்டாகிப் போனது. வால் மட்டும் அப்படியே துண்டாகி கிடக்க பாம்பு ஓடிப் போனது.

அதுக்கபுறம் இவனுக்கு ஒரு பயம் உண்டாகியது.

அடிபட்ட பாம்பு நம்மை பழிவாங்கி விடுமோ என்ற பயம்.

கொஞ்ச நாட்கள் ஆனது. இப்படி பயந்துகொண்டே எத்தனை நாள் தான் இருக்கிறது? அந்தப் பாம்போடு பேசி சமாதனம் செய்யலாம் என்று முடிவு செய்தான். உடனே ஒரு கோப்பையிலே பால் எடுத்துகொண்டு போனான்.

பாம்பு புற்றுக்குப் பக்கத்திலே வைத்தான் பாம்பு வெளியிலே வந்தது. இவன் விபரத்தைச் சொன்னான். அப்போது அந்தப் பாம்பு சொல்லியதாம்:

இதோ பார் இனிமேல் நாம் நண்பர்களாக ஆகுவது என்பது முடியாத காரியம்.

நான் உன்னைப் பார்க்கின்றபோதெல்லாம் அல்லது உன்னை நினைக்கின்றபோதெல்லாம் எனக்கு என்னுடைய அறுபட்ட வால் தான் ஞாபகத்துக்கு வரும்! அதுபோல நீ என்னைப் பற்றி நினைக்கிறபோதெல்லாம் இறந்து போன உன்னுடைய மகனின் நினைப்புத்தான் உனக்கு வரும்!

ஒருவர் நமக்குச் செய்கின்ற தீங்கு நம் மனதிலே ஆழமாக பதிந்துவிடுது! பழிவாங்குகின்ற சுபாவம் தலைதூக்கி நிக்குது! இப்படிச் சொல்லிவிட்டு அந்தப் பாம்பு, புற்றுக்குள்ளே போய் விட்டுதாம்.

பொதுவாக உலக இயல்பு இது.

மற்றவர்கள் நமக்கு செய்த நல்லதையெல்லாம் நாம் சுலபமாக மறந்துவிடுகிறோம்.

ஆனால் அவர்கள் செய்த தீமைகள் நம் மனதிலே ஆழமாக பதிந்து போய்விடுகிறது. அதுமட்டுமில்லை.

பழிவாங்குவதற்கான தருணத்தை எதிர்பார்த்து மனம் காத்துக் கொண்டிருக்கிறது!

இதனாலே என்ன ஆவது?

மனதிலே அமைதி இல்லை. எப்போதும் பயந்து பயந்து வாழ்கிறோம். அதனாலே, வாழ்க்கையிலே மகிழ்ச்சியும் மன அமைதியும் வேண்டும் என்று நினைக்கின்றவர்கள். அடுத்தவர்கள் செய்த தீமைகளை மறத்துவிட வேண்டும்.

நன்மைகளை மறந்துவிடவே கூடாது. எப்போதும் ஞாபகத்திலே வைத்திருக்க வேண்டும்.

நம்மவர்கள் சிலபேர் பழிவாங்குகின்ற விதமே தனி.

ஒருவன் இன்னொருத்தனை போட்டு அடியோ அடி என்று அடித்துக்கொண்டிருந்தான்.

அந்த வழியாக வந்த ஒருவர் "ஏன்டா அவனைப் போட்டு இப்படி அடிக்கிறாய்?" என்றார்.

"இவனைப் பழிவாங்கிக்கொண்டிருக்கேன்" என்றான் அவன்.

"எதற்காகப் பழிவாங்குகிறாய்?" என்றார்.

"இவன் என் முகத்தை பார்த்து தேவாங்கு என்று திட்டி விட்டான் சார்!" என்றான்.

"எப்போ திட்டினான்?" என்று கேட்டார் அவர். "ஆறு மாதத்திற்கு முன்பு!" என்றான். "அதுக்கு ஏன் இப்போது அடிக்கிறாய்?" என்றார். "நான் இன்றைக்குத்தான் சார் தேவாங்கை நேரிலே பார்த்தேன்" என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் அடையாள வேலை நிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பதிவாளரது திட்டமிட்டு செயற்படுத்தப்படும் பொறுப்பற்ற நடவடிக்கையை எதிர்த்து எதிர்வரும் 28 ஆம் திகதி ஒருநாள் அடையாள தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் முன்னெடுத்த ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த குறித்த சங்கத்தின் தலைவர் பி.ரி.ஜே. ஜசோதன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் காணப்படும் கல்விசாரா ஊழியர்களின் 355 நிரந்தர பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி பெறுவதில் சிறு நிர்வாகத்தவறு ஏற்பட்டுள்ளது. அதேவேளை திட்டமிட்ட பின்னடிப்புச் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் ஊடகச்செய்தியினூடாக கூறுகின்ற போதிலும் அதன் உண்மையான நிலைமை வேறாக இருக்கின்றது.

குறிப்பாக இலங்கையில் உள்ள 17 பல்கலைக்கழகங்களிலும் காணப்படும் போதனை சாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்களில் 1400 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குவது எனும் அரச தீர்மானத்திற்கமைய அனைத்துப் பல்கலைக் கழகங்களாலும் வழங்கப்பட்ட கோரிக்கையின் படி காணப்படும் வெற்றிடங்களில் 67% வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டு பெரும்பாலான பல்கலைக்கழகங்களினால் அவற்றிற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 355 பதவி வெற்றிடங்களில் 67 வீதமான 237 இற்கும் அதிகமான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியில் ஆக 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. இதனால்பாதிக்கப்படுவது தனியே பல்கலைக்கழக சமூகம் மாத்திரமன்றி எமது சமூகத்தின் இளம் தொழில் தேடுவோராகவே இருக்கின்றது.

அரசுக்குஅழுத்தங்களை கொடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை வழங்குவதில் திறைசேரி காட்டிய தாமதங்களை சுட்டிக் காட்டியதில் யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தின் பெரும் பங்கு உள்ளது, இது இவ்வாறு இருக்க எமது வெற்றிடங்கள் இன்று நிரப் பப்பாத நிலைமை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கோரிக்கைக் கடிதங்களில் காணப்படும் தவறுகளை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்துரையாடல்களில் (20.03.2025, 30.09. 2025) தெளிவுபடுத்தி இருந்த போதிலும் அதில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அக்கறை செலுத்தாது பல்கலைக் கழகத்தின் தவறை அவர்களே சீர் செய்ய வேண்டும் எனக் கூறி இன்று அதற்கான அனுமதி கிடைக்கப்பெறாததற்கு அவர்களும் பொறுப்பானவர்கள் ஆவார்கள்.

எனவே, எமது ஊழியர் சங்க விசேட பொதுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி உரிய தரப்புகளுக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக எதிர்வரும் 28.10.2025 அன்று அடையாள வேலை நிறுத்தம் ஒன்றினை மேற்கொள்வதுடன், எமது நியாயமான கோரிக்கைகள் அனைத்திற்கும் நியாயமான தீர்வு கிடைக்காதபட்சத்தில் எமது தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தி அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் விஸ்தரிப்பது எனவும் தீர்மானித்துள்ளதை மிகவும்மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை / பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 250 | 110 | 150-200 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 220 | 240 | 220 | -- |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 300 | 250 | 160 | 200 |
| தக்காளி | 200 | 250 | 250 | 240 | 150 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 280 | 150 | 80 | 250 |
| கோவா | 250 | 200 | 200 | 200 | 140 | 150 |
| கரட் | 250 | 250 | 250 | 300 | 160 | 220 |
| பூசணி | 80 | 70 | 100 | 60 | 30 | 50 |
| புடோல் | 250 | 250 | 150 | 250 | -- | -- |
| வாழைக்காய் | 150 | 80 | 100 | 150 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 250 | 300 | 220 | 150-220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 160 | 140 | 150 |
| பாகற்காய் | 500 | 400 | 500 | 600 | 275 | 450 |
| வெண்டைக்காய் | 150 | 250 | 200 | 300 | 110 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 240 | 250 | 300 | 230 | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 500 | 400 | 300 | 500 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 250 | 140 | 220 |
| பீற்றூட் | 200 | 120 | 250 | 150 | 100 | 100 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 300 | 270 | 420 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 250 | 300 | 100 | 150 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 450 | 300 | 330 |
| கத்தரிதம்புள்ள | 180 | 160 | 300 | 200 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 60-140 | 150 | 120 | -- | -- |
| தேசிக்காய் | 1200 | 1800 | 2000 | 1400 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-200 | 150 | -- |
| இராசவள்ளி | 700 | 850 | 1000 | 800 | 650 | 750 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 500 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 200 | 75 | -- |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 60 | 40 | -- |
| வல்லாரை | 80 | 60 | 80 | 100 | 35 | -- |
| ஈரப்பலா | 150 | 120 | 100 | 200 | -- | -- |

## இராசிபலன்

25.10.2025
ஐப்பசி 08, சனிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 1.37 மணி
அனுசம் காலை 6.58 மணிவரை

சுப நேரம் 3.02 -4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்-
பரணி, கார்த்திகை

வளவன்

**மேஷம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, யோசித்து செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கடகம்:** மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**துலாம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன்தொல்லைகள் குறையும், பிரிந்தவர்கள் இணைய வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், முன்னேற்றம் கூடும்.

**கும்பம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், போசன சுகமுண்டு, உற்சாகமான நாள்.

**மிதுனம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், நன்மைகள் நடைபெறும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், செயற்பாட்டில் வெற்றி கிடைக்கும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம்.

**தனுசு:** பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மீனம்:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ஒரு போதும் உங்களை நியாயப்படுத்திக்கொள்ள பிறரைக் காயப்படுத்தி விடாதீர்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 893





ஆகா! அந்தக் கண்களில் ஒரு காலத்தில் குடிகொண்டிருந்த காந்த ஒளி எங்கே போயிற்று? தெய்வமே! இப்படியும் மனிதர்கள் மாறுவது உண்டா? இலங்கைத் தீவில் விஷயுரத்தில் பீடிக்கப்பட்டவர்கள் பலரை நீண்ட நாள் காய்ச்சலுக்குப் பிறகு உயிர் போகும் சமயத்தில் ஊமை ராணி மந்தாகினி பார்த்ததுண்டு.

ஆகா! ஒரு சமயம் தங்கச் சூரியனைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்த இவருடைய களை ததும்பிய முகமும் அவ்வளவாக மாறிப் போயிருக்கிறதே! ஒருவேளை இவருடைய அந்திம காலமும் நெருங்கி விட்டதோ!

திடீரென்று மந்தாகினிக்கு அன்று மாலை தான் பார்த்த பயங்கரக் காட்சி நினைவுக்கு வந்தது. அவள் அச்சமயம் நின்ற இடத்திலேதான் ரவிதாஸன் என்னும் கொலைகாரனும் அவனுடைய தோழனும் நின்றார்கள். அங்கிருந்து தான் வேல் எறியக் குறி பார்த்தார்கள். ஒருவேளை கட்டிலில் படுத்திருப்பவர் மீது எறியத்தான் குறி பார்த்தார்களோ? இந்த நினைவினால் மந்தாகினியின் உடம்பெல்லாம் வெடவெடவென்று நடுங்கியது. கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. மயக்கம் வரும் போலிருந்தது. தூணைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கால்களை ஊன்றி நின்று சமாளித்துக் கொண்டாள்.

**30 ஆம் அத்தியாயம்**
**குற்றச்சாட்டு**

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் உள்ளமும் உடலும் சில நாளாகப் பெரிதும் நைந்து போயிருந்தன. புயல் அடித்த இரவு அவர் தூங்கவே இல்லையென்று இளையபிராட்டி முதன்மந்திரியிடம் கூறியது மிகைப்படுத்திக் கூறியதல்ல. அன்று பகற்பொழுது அவர் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டு தானிருந்தது. பிற்பகலில் சின்ன பழுவேட்டரையர் வந்து அவருடைய சஞ்சலத்தை அதிகப்படுத்தி விட்டார். முக்கியமாக, முதன் மந்திரி அநிருத்தர் மீது அவர் பல குற்றங்களைச் சுமத்தினார்.

அவர் தஞ்சைக்கு வந்தது முதல் கோட்டைக் குள் ஜனங்கள் வருவது பற் றிய கட்டு திட்டங்கள் எல் லாம் உடைந்து விட்டன என்று கூறினார். முதல்மந்திரியைப் பார்ப்பதற்கு வருகிறோம் என்று வியாஜத்தினால் கண்டவர்கள் எல்லாம் கோட்டைக்குள் நுழைகிறார்கள் என்றும், இதனால் சக்கரவர்த்தியின் பாதுகாப்புக்கே பங்கம் விளையலாம் என்றும் குறிப்பிட்டார். அந்த இரண்டு குற்றங்களையும் கேட்ட சக்கரவர்த்தி தமக்குத் தாமே புன்னகை செய்து கொண்டார். அவற்றை அவர் முக்கியமாகக் கருதவில்லை.

ஆனால், மேலும் காலாந்தககண்டர் சுமத்திய குற்றங்களைப் பற்றி அவ்விதம் அலட்சியம் செய்ய முடியவில்லை.


அன்று வெளியிலேயிருந்து வந்த ஜனங் களுக்கும் வேளக்காரப் படையினருக்கும் வீதியில் விவாதம் முற்றிப் பெரும் கலவரமாகி விடக் கூடிய நிலைமை ஏற்பட்டதென்றும், அச்சமயம் நல்ல வேளையாகத் தாம் அங்கே செல்ல நேர்ந்த படியால் விபரீதம் எதுவும் நேரிடாமல் தடுத்து இரு சாராரையும் சமாதானப் படுத்தி அனுப்பியதாகவும் கூறினார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தக தக தங்கக்குதிரை



(நேற்றைய தொடர்ச்சி)

தன் இஷ்ட தெய்வமான முருகனை மனதில் நினைத்து, "இறைவா! நான் கொண்ட காரியத்தில் வெற்றி கிடைக்க உன்னால் தான் உதவ முடியும், எப்போதும் என்னுடன் இருக்கும் இறைவா! எனக்கு ஒரு நல்ல வழி காட்டு, மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று நம்பிக்கையோடு வேண்டினார்" இறைவனை மனதில் கும்பிட்டு கண்களை திறந்து பார்த்தார், என்ன ஆச்சரியம் தூரத்தில் ஒரு மலையடி வாரத்தில் தங்க நிறத்தில் ஏதோ ஒளி தெரிந்தது. சூரியனின் மாலை நேர கதிர்கள் ஏதோ ஒன்றின் மீது பட்டு எதிரொலித்தது.

இராமநாதனுக்கு மனதில் உற்சாகம் தொற்றிக் கொண்டது, வேண்டிய இறைவன் வேண்டுதலுக்கு செவி சாய்த்துவிட்டார். இனிமேல் எல்லாம் ஜெயம் தான் என்று தான் ஒளி கண்ட இடத்தை நோக்கி தன் தேரில் விரைந்தார்.

அந்த ஒளியானது ஒரு மலையடிவாரத்தின் பின்னால் தெரிந்தது. அங்கே விரைந்த இராமநாதன் ஆச்சரியத்தில் வாயை பிளந்து நின்றார், அங்கே அவர் கண்ட காட்சி அவர் மனதை சொல்ல முடியாத அளவுக்கு மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மலையடிவாரத்தை அடைந்த இராமநாதன் கண்டது தக தக தங்க நிறத்தில் இறக்கைகள் கொண்ட ஒரு குதிரை தான்.

அருகே சென்ற அவர் தேரிலிருந்து இறங்கி ஓடிபோய் குதிரையை பார்த்தார், பார்த்த மாத்திரத்தில் அவரது உற்சாகம் சுதி இறங்கிவிட்டது. அங்கே இருந்த குதிரையானது உயிரற்ற தங்க குதிரை, குதிரையின் உடல் முழுவதும் தங்கத்தாலும் அதன் கண்கள் சிவப்பு நிற இரத்தின கல்லாலும், அதன் பற்கள் வைரத்தாலும் செய் யப்பட்டிருந்தது. ஒளி காட்டிய இறைவன் சரியான வழி காட்டவில்லையோ என்று நினைத்த இராமநாதன், குதிரையை சுற்றி வந்தார்.

ஒன்றுமே புலப்படவில்லை, அதன் கண்களை உற்று நோக்கினார். என்ன ஆச்சரியம், அதன் கண்களில் சில எழுத்துகள் தெரிந்தன. பட்டு தேச மொழியில் இருந்தாலும் அதை இராமநாதன் சரியாக படித்து அர்த்தம் புரிந்துக். கொண்டார்."

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமையை எதிர்த்து முதலிலே போராடுவது இறுதியில் போராடுவதை விட எளிதானது.

~ லியானார்டோ டாவின்சி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டை உலுக்குகின்ற போதைப்பொருளின் அபாயம்

நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினரிடம் நிதிப் பலமும் ஆயுத பலமும் தாராளமாக இருக்கின்றன.

இதுதவிர, பொலிஸ் சேவையில் உள்ள சிலர் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு உதவுகின்றனர்.

தகவல்களை அவர்களுக்குத் தெரியப்படுத்துகின்றனர்.

இதைவிட, படைத் தரப்பிடமிருந்து ஆயுதங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தவிர, போதைப்பொருள் வர்த்தகத்துடனும் பாதாள உலகக் குழுவுடனும் தொடர்புபட்டவர்கள் அரசியலிலும் உள்ளனர்.

எனவே இவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் பலமாகப் போராட வேண்டியுள்ளது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் 23ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் ஊடக நிறுவன இயக்குநர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகப் பிரதானிகளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சந்தித்தார்.

அந்த சந்திப்பின் நோக்கம், போதைவஸ்தை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கு ஊடகங்களின் பூரணமான ஒத்துழைப்பைக் கோருவதும் போதை ஒழிப்பு நடவடிக்கையை தேசிய ரீதியில் முன்னெடுக்கின்ற செயற்றிட்டத்தைத் தெளிவுபடுத்துவதுமாகும்.

குறித்த சந்திப்பில் போதைப்பொருள் வியாபாரம் – பாதாள உலகக் குழு – அவர்களிடம் இருக்கக்கூடிய நிதி மற்றும் ஆயுத பலம் – படைத்தரப்பிடமிருந்து அவர்களுக்குக் கிடைத்த ஆயுதங்கள் – பொலிஸார் சிலர் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு தகவல்களை வழங்குகின்ற நிலைமைகள் என்ற எல்லைக்குள் நின்று, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

நயத்தக்க நாகரிகம் கருதி சில உண்மைகளை அவர் மறைமுகமாகக் கூறியிருந்தார்.

அதில் இந்த நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் இத்துணை தூரம் விஸ்பரூபமெடுப்பதற்குப் பின்னணியில் ஆட்சித் தரப்புகள் இருந்துள்ளன என்ற தகவல் ஜனாதிபதி அநுரவின் உரைக்குள் புரையோடியிருந்ததைக் காண முடிந்தது.

இதுதவிர, போதைப்பாவனைக்கு அடிமையானவர்களின் பரிதாபகரமான நிலைமைகள் மற்றும் உழைத்து தமது வீட்டைப் பாதுகாக்க வேண்டிய பிள்ளைகள் தமது வீட்டில் உள்ள உடைமைகளைக் களவெடுத்து போதைப்பொருள் வாங்குவதன் காரணமாகப் பெற்றோர்கள் அடைந்திருக்கக்கூடிய அவலங்களை விபரித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; போதைவஸ்துக்கு குறித்த சில பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் ஆளாகியுள்ளனர் எனக் கூறியபோது, போதைவஸ்தை இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற மனநிலை அனைவரையும் ஆட்கொண்டது.

ஆக, எங்களை நாங்களே அழிப்பதாக இருக்கக்கூடிய போதைப்பொருளை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கு ஏதோவொரு வகையில் அனைவரும் பங்காற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம்

இதை நாம் செய்யத் தவறுவோமாயின், அவரவர் தத்தம் சொந்த வாழ்க்கையிலும் போதைப் பயன்பாட்டால் ஏற்படும் அவலத்தைச் சந்திக்க நேரிடலாம்.

## களமிறங்கியது குற்றத்தடுப்புப் பிரிவு

## யாழ்ப்பாணத்தின் அமைதிக்கு குந்தகம் விளைவித்தோர் மீது கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் பணத்திற்காக வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள், போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் மீற்றர் வட்டிக்குப் பணம் வழங்கி சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்பிரகாரம் வெளிநாடுகளிலிருந்து பெரும் தொகைப் பணத்துடன் வந்து யாழ்ப்பாணத்தில் வன்முறையில் ஈடுபடுதல், மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்து அதனைத் திருப்பிச் செலுத்தத் தவறுபவர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்து காணொளியாகப் பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிடுதல், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்துப் போதை மாத்திரைகளை விற்றல், போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபடுதல் போன்ற சட்ட விரோதச் செயற்பாடுகள் மூலம் சொத்துக்களைச் சேர்த்தவர்கள் குறித்துப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அதன் முதற்கட்டமாக எட்டுப்பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களில் ஐவருக்கு எதிராக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றிலும் மூவருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றிலும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

சட்ட விரோதமான முறையில் சொத்து சேர்ப்பவர்கள் தொடர்பில மேலும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில் அது தொடர்பில விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையால் அச்சத்தில் புரளிபாடும் எதிர்க்கட்சிகள்

போதைப்பொருளுக்கு எதிரான பலமான தேசிய வேலைத்திட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கு அஞ்சியே எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துக்கு எதிரான போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள் பலரின் பெயர்களை உரிய நேரத்தில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்போம். போதைப்பொருள் வர்த்தகர்கள், பாதாள உலகக் குழுக்கள் மற்றும் சமூக விரோதக் குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கும் போது எதிர்க்கட்சிகளின் சில உறுப்பினர்கள் கலக்கமடைந்து துள்ளிக் குதிக்கின்றார்கள்.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களில் சிலர் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை கண்டுகொள்ளவில்லை. சிலர் தமது சுய தேவைகளுக்காக பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப் பொருள் வர்த்தகர்களை பலப்படுத்தி அதனூடாக இலாபமடைந்தார்கள் என்பதே உண்மை என்றார். (ம-7)

## பவுசரை முந்த முயன்றவர் சில்லுக்குள் சிக்கிப் பலி

(கொழும்பு)

கொழும்பு, கொலன்னாவ வீதியில் நேற்று 24 முற்பகல் இடம்பெற்ற கோர விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த வீதியில் பெற்றோல் பவுசர் ஒன்று பயணித்துக் கொண்டிருந்த வேளையில் அதன் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் பவுசரை முந்திச் செல்ல முற்பட்டுள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிள் சறுக்கி வீதியில் விழுந்ததில் இளைஞர் பவுசரின் பின் சில்லுக்குள் சிக்கிய நிலையில் இளைஞரின் தலை பவுசரின் சில்லுக்குள் அகப்பட்டு நசுங்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் கொலன்னாவப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 200 மில்லிகிராம் ஹெரோயின்; 22 வயது இளைஞன் கைது

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 22 வயது இளைஞனொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாண பொலிஸ் போதை தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் போதைப் பொருள் தொடர்பிலான துரித விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின், சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.(ம-7,104)

## வவுனியாவில் விபத்துக்களால் ஐந்து வருடங்களில் 58 பேர் பலி

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இடம்பெற்ற பல்வேறு விபத்துச் சம்பவங்களினால் இதுவரை 58 பேர் பலியாகியுள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் விபத்துக்கள் தொடர்பான தரவுகளை வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையிடம் கோரிய நிலையில் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளியான தரவுகளின்படி இவ்வருடத்தின் முதல் 10 மாதங்களில் மட்டும் வவுனியா மாவட்டத்தில் 18 பேர் விபத்துக்களினால் உயிரிழந்துள்ளனர்.

இது கடந்த வருடங்களை விட விபத்துக்களால் பலியானவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும் கடந்த ஐந்து வருடங்களில் விபத்துக்களினால் உயிரிழந்தவர்களில் 18 வயதிற்கு குறைந்தவர்கள் 8 பேர் உள்ளடங்குவதும் குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## செவ்வந்தியால் கிளிநொச்சியில் சிக்கிய கஞ்சாப் பொதிகள்

(கிளிநொச்சி)

செவ்வந்தி தொடர்பிலான விசாரணைகளுக்காக கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட பொலிஸ் குழுவினர் கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஐந்து பொதிகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (24) மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணேமுல்ல சஞ்சீவ கொலைக்குப் பின்னர் தலைமறைவான செவ்வந்தி, அம்பாள்குளப் பகுதியில் தங்கியிருந்தமை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொழும்பிலிருந்து விசேட பொலிஸ் குழுவினர் கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்தனர்.

அவர்களது விசாரணை நடவடிக்கையின் ஓரங்கமாக குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மேற்படி ஐந்து பொதி கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (ம-7,315)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

## பகுதி VI

**29**

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

● **1931 ஆம் ஆண்டின் சனத்தொகை அடிப்படையில் 70 தேர்தல் தொகுதிகளும் மாகாண மட்டத்தில் பிரிக்கப்பட்டிருந்தாலும் மாகாணத்திற்குள் தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்யப்படும் போது 1946 ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீடே பாவிக்கப்பட்டது.**

● **1946 ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டின்படி இனரீதியில் பார்த்தால் 95 தேர்தல் தொகுதிகளும் சிங்களவர்- 66, இலங்கைத் தமிழர்- 12, இந்தியர் (முஸ்லீம் தவிர)- 10, முஸ்லீம்-6, ஏனைய இனத்தவர்-1, என பிரிக்கப்படல் வேண்டும். ஆனால் மாகாண மட்டத்தில் ஒதுக்கப்பட வேண்டிய தேர்தல் தொகுதிகள் 1946 ஆம் ஆண்டின் சனத்தொகை ரீதியில் பார்க்கும் போது 95 தேர்தல் தொகுதிகளும் அட்டவணை-1இல் காட்டியதுபோன்று பிரிக்கப்படல் வேண்டும்.**

குறிப்பு: 1946ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டின்படி 732,000 இந்தியர்கள் (666.000 இந்தியத் தமிழர்கள், 37,000 இந்திய முஸ்லீம்கள், 29,000 ஏனைய இந்தியச் சமூகத்தவர்கள்) இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

சிறுபான்மை இனத்தவர்களின் பிரதிநிதித்துவம் பற்றி எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

குழுவின் எல்லை நிர்ணயத்தின்படி, வட மாகாணத்தின் 9 தொகுதி களிலும் கிழக்கு மாகாணத்தில் 4 தொகுதிகளிலுமாக மொத்தம் 13 தொகுதிகளில் இலங்கைத் தமிழர்கள் வெல்லமுடியுமென்றும் மேலும் மேல் மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து இந்திய மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஆதரவுடன் தமிழர் ஒருவர் வெற்றிபெற வாய்ப்புள்ளதாகவும் சொல்லியிருந்தார்கள்.

அட்டவணை-1 இல் காட்டியது போன்று இந்தியத் தமிழர்களுக்கு எட்டுத் தொகுதிகள் கிடைக்க வேண்டும். அதில் ஏழு தொகுதிகள் பின்வருமாறு எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. மத்திய மாகாணத்தில் நுவரெலியா தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 26%, இலங்கைத் தமிழர்- 9%, இந்தியத்தமிழர்- 59%, முஸ்லீம்-3%, ஏனையோர்- 3%).

தலவாக்கலை தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 7%, இலங்கைத் தமிழர்- 9%, இந்தியத் தமிழர்- 80%, முஸ்லீம்-2%, ஏனையோர்-2%), கொட்டகலை தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 27%, இலங்கைத் தமிழர்- 15%, இந்தியத்தமிழர்- 54%, முஸ்லீம்-3%, ஏனையோர்- 1%. மஸ்கெலியா தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 23%, இலங்கைத் தமிழர்- 13%, இந்தியத் தமிழர்- 61%, முஸ்லீம்-1%, ஏனையோர்-2%), நாவலப்பிட்டி தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 23%, இலங்கைத் தமிழர்- 14%, இந்தியத்தமிழர்- 51%, முஸ்லீம்-5%, ஏனையோர்- 7%) ஆகிய ஐந்து தொகுதிகளும் ஊவா மாகாணத்தில் பதுளை இரட்டை அங்கத்தவர்கள் தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 44%, இலங்கைத் தமிழர்- 8%, இந்தியத்தமிழர்- 42%, முஸ்லீம்-3%, ஏனையோர்- 3%) ஹப்புத்தளைத் தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 32%, இலங்கைத் தமிழர்- 6%, இந்தியத்தமிழர்- 57%, முஸ்லீம்-2%, ஏனையோர்-3%) ஆகிய இரு தொகுதிகளும் உருவாக்கப்பட்டன.

மேல் மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து இந்தியத் தமிழர்களின் சதவீதம் (25%) இலங்கைத் தமிழர்களின் சதவீதத்தை (16%) விட கூடுதலாகவிருப்பதால் இந்தியத் தமிழரை போட்டியிடச்செய்வதால் இந்தியத் தமிழர் ஒருவர் வெற்றிபெற வாய்ப்புள்ளதாகவும் சொல்லியிருந்தார்கள். (குறிப்பு- அவர்கள் குறிப்பிட்டபடி மத்திய கொழும்பிலிருந்து தமிழர்கள் ஒருபோதும் தெரிவு செய்யப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் இடதுசாரி அரசியல்வாதியான பீட்டர் கெனமனுக்கு தமிழர்களின் ஆதரவு இருந்ததும் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை முதலாவது தேர்தலின் பின் இரத்துச் செய்யப்பட்டதுமாகும்.)

அட்டவணை-1இல் காட்டியது போன்று முஸ்லீம் சமூகத்திற்கு ஆறு தொகுதிகள் கிடைக்கவேண்டும். முஸ்லீம் சமூகம் மாகாணங்களில் சிதறி வாழ்ந்ததால் அவர்களுக்கு ஆறு தொகுதிகள் ஒதுக்க முடியவில்லை என எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் மூன்று தொகுதிகளும் ( மூதூர், கல்முனை மற்றும் பொத்துவில்) மேல் மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து முஸ்லீம் ஒருவர் வெற்றி பெறக்கூடியதாக நான்காவது தொகுதியும் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பலாங்கொடை-பலப்பிட்டிய, பலாங்கொடை மற்றும் கடுகண்ணாவை ஆகிய இரட்டை அங்கத்தவர்கள் தொகுதிகள் சாதி, போக்குவரத்து வசதி போன்ற காரணங்களை முன்னிலைப்படுத்தி மக்களின் வேண்டுதலுக்கமைய உருவாக்கப்பட்டவையாகும்.

இந்தியர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் குடியுரிமை பெற தம்மை பதிவுசெய்து கொள்ளாத காரணத்தினால் இலங்கையின் சனத்தொகைக்கும் இலங்கையின் குடியுரிமை உள்ளவர்களின் சனத்தொகைக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. 1946ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டின்படி இலங்கையின் சனத்தொகை 6,636,617 ஆகவும் குடியுரிமை உள்ள வர்களின் சனத்தொகை 6,484,409 ஆகவும் காணப்பட்டது.

இவ் எல்லை நிர்ணயத்தின்படி சுதந்திர இலங்கையில் 1947,1952 மற்றும் 1956 ஆகிய வருடங்களில் மூன்று பாராளுமன்றத்தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

### முதன்முறையாக பொதுத் தேர்தல்

சோல்பரித் திட்டம் விதித்ததன்படி, 1947 இல் தேர்தலுக்கான ஒழுங்குகள் பூர்த்தியாயின. நாட்டின் வரலாற்றில் முதன் முறையாகப் பொதுத் தேர்தல், கட்சிமுறையின் அடிப்படையில் நடாத்தப்பட்டது. D.S. சேனநாயக்கா அவர்கள் நிறுவிய ஐக்கிய தேசியக் கட்சி (United National Party) ஒன்று மாத்திரம், தேச அடிப்படையில் போட்டியிட்டது. அக்கட்சி, சிங்களவரைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த போதிலும், அஃது எல்லாச் சமூகத்தினரதும் ஆதரவைப் பெற்றுத் திகழ்ந்தது.

ஒரு மாத காலமாக நடைபெற்ற தேர்தலில், ஐ. தே. க. அதிபெரிய கட்சியாக 42 உறுப்பினருடன் வெற்றி பெற்றது. 21 தொகுதிகளில் சுயேட்சையாளர் தெரிந்தெடுக்கப்பட்டனர். தேசாதிபதி நாயகம், தேர்தல் முடிந்ததும், சேன நாயக்காவை அழைத்து அரசாங்கத்தை அமைக்குமாறு பணித்தார்.

### முதலாவது “கூட்டு மந்திரி சபை”

புது அமைச்சரவையில் 14 அமைச்சர்கள் இடம் பெற்றனர். முதலாவது அமைச்சரவையில் ஜோர்ஜ். ஈ. டீ. சில்வா கைத்தொழில் மற்றும் மீன்பிடி அமைச்சராகவிருந்தார். தேர்தல் வழக்கில் அவரது ஆசனம் பறிபோனதால் அவரின் இடத்திற்கு ஜீ.ஜீ. பொன்னம்பலம் நியமிக்கப்பட்டார்.

காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற் சாலையும் (1950) பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் (1954) ஜீ.ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில் அமைச்சராகவிருந்த காலத்தில், ஆரம்பிக்கப் பட்டவையாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில்...

கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சம் அடைந்திருந்தபொழுது இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 50 பொதுமக்களின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி வெளிவாசலில் இடம்பெற்றது.

இதனைக்கொக்குவில் படுகொலை நினைவேந்தல் குழு ஏற்பாடு செய்திருந்தது.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் மற்றும் 22, 23, 24ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வைத்திய சாலை, கொக்குவில் பிரம்படி கோண்டாவில், கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகம் ஆகிய இடங்களில் இந்திய இராணுவம் பொதுமக்களை படுகொலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வடக்கு மாகாண...

மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபையின் வட மாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ். பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வவுனியா - மன்னார் 220 கிலோ வோட் மின் பரிமாற்ற வடத்தினை மாற்றியமைப்பதற்கான வேலைகளிற்காக, வடமாகாணத்திற்கான 132 கிலோ வோட் வவுனியா - புதிய அநுராதபுர மின் பரிமாற்றக் கட்டமைப்பானது நாளை ஐப்பசி 26ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை துண்டிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள் முழுவதும் மின் விநியோகம் துண்டிக்கப்படும். மேலும் வேலைகள் பூர்த்தியாகியவுடன் மின் இணைப்பானது உடனடியாக மீள வழங்கப்படும்எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## உள்ளூராட்சி...

இலங்கை அரசு நிதி நெருக்கடியை எதிர்கொள்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டபோது சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சு உள்ளூராட்சி சபைகள் மீது திணிக்கப்பட்டது.

இதனால் சிறிய சபைகள் மட்டுமல்ல மாநகர சபைகள் பெரிய சபை, அதிக வருமானம் எனக் காரணம் கூறப்படுகின்றது. பெரிய சபை, கூடிய வருமானம் என்றால் அதேபோன்று அதிக உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கொண்ட சபைகளாகவே மாநகர சபைகள் காணப்படும்.

இந்தவகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் தற்போது 816 பேர் பணியாற்றுவதனால் அவர்களின் சம்பளத்தின் 60 வீதம் 660 மில்லியன் ரூபாய் வரை செலவதோடு மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறைநாள் கொடுப்பனவு, உத்தியோகத்தர்களின் வாகனக் கொடுப்பனவு என்பவற்றிற்கு 300 மில்லியன் ரூபாய் செலவு ஏற்படுகின்றது.

இவ்வாறான சூழலில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மொத்த வருமானம் 2026ஆம் ஆண்டு 1,500 மில்லியனைக்கூட எட்ட முடியாத காரணத்தால் இக்கோரிக்கையை முன்வைப்பதோடு இவ்விடயத்தை மாநகர சபையில் தீர்மானமாக நிறைவேற்றவும் எண்ணுவதோடு ஏனைய சபைகளும் இதனைத் தீர்மானமாகக் கொண்டு வந்து ஒத்துழைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கின்றேன் என்றார். (ம-7)

## யாழில் பல்வேறு...

நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாரின் நேற்றைய திடீர் சோதனையின் போது குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஒரு சந்தேக நபரிடம் இருந்து மூன்று கிராம் ஹெரோயினும் மற்றைய நபரிடமிருந்து இரண்டு கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

## மோ.சைக்கிளில்...

புரம் பகுதியைச் சேர்ந்த 37 வயதான இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிளைச் சோதனையிட்டபோதே கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

குறித்த சந்தேகநபரிடமிருந்து 6 ½ கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## இஷா...

செவ்வந்தி தப்பியதற்கு உதவிய குற்றச்சாட்டில் யாழில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் தொடரும் விசாரணைகளில் யாழில் இன்னும் பலர் கைது செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட குறித்த படகு, யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட படகின் இயந்திரத்தைக் காணவில்லை என்றும், குறித்த படகை ஓட்டிச் சென்ற இரு இளைஞர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இஷாரா கிளிநொச்சியில் தலைமறைவாகியிருக்க, உதவியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இஷாரா செவ்வந்தியின் தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## கொடிகாமத்தில்...

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இருப்பினும் மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தை யார் மேற்கொண்டார்கள் என இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7,30,33)


மஹஜன சம்பத
திகதி 2025.10.24
சீட்டிழுப்பு இலக்கம் 5992
D 1 9 3 0 3 3
அத சம்பத D 3 0 3 3
சீட்டிழுப்பு இலக்கம் 0567
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.24
சீட்டிழுப்பு இலக்கம் 108
மீனம் 04 24 25

தன நிதானய
திகதி - 2025.10.24
சீட்டிழுப்பு இலக்கம் - 2022
Q 21 25 46 80 Q
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 24/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2340
T 10 10 19 46 55

ஜய ஜய JAYA
திகதி 2025.10.24
சீட்டிழுப்பு இலக்கம் 0260
E 7 7 0 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4234
சீட்டிழுப்பு திகதி 24.10.2025
D 29 38 75 78
D

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.24
சீட்டிழுப்பு இலக்கம் 1301
ரிஷபம் 04 21 26 28 ரிஷபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிரி தன சம்பத
24.10.2025 வெற்றி வாரம் 0700
F 6 6 4 4 8 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,099,867.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2966
சீட்டிழுப்பு திகதி 2025.10.24 தினம் வெள்ளிக்கிழமை
24 25 26 79 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,685,954.40
DLB

சனிதா
திகதி 24.10.2025 வெற்றி வாரம் 5127
07 32 39 77 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,559,336.40
DLB

சசிரி
வெற்றி வாரம் 0798
சீட்டிழுப்பு திகதி 24.10.2025
வெள்ளிக்கிழமை
03 17 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4678
சீட்டிழுப்பு திகதி 24.10.2025 தினம் வெள்ளிக்கிழமை
09 37 55 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,624,220.00
DLB

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 09 14 45 66 74
2142
24.10.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.602,346,459.40
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2792
சீட்டிழுப்பு திகதி 2025.10.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,328,500.80
13 38 42 59 S
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலிலிருந்து 500 மீற்றர் தூரத்தில், நல்ல செம்மண் வளமுள்ள காணி 2 பரப்பாகவும், 4 பரப்பாகவும் விற்பனைக்குண்டு.
வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் ஏற்றது. (5718)

**077 129 8159**

## 22 உடன் விற்பனைக்கு 22

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 10 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட மாடிக் கடையும் 16 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்,
- யாழ். K.K.S. வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் K.K.S. வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 120 அடி அகலமும் 250 அடி நீளமும் கொண்ட பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகைக் காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும்,
- யாழ். நல்லூரிற்கு அண்மையில் மாநகர சபைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்,
- யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்

உடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு :
**077 723 2535** (C-4180)

## வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனத்திற்கு யாழ் கிளையில் பணியாற்றக்கூடிய காப்புறுதி விற்பனை முகாமையாளர் மற்றும் காப்புறுதி ஆலோசகர்கள் வேண்டப்படுகின்றனர்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு விபரங்களை அனுப்பவும். (5724)

**077 242 5414**

## விற்பனைக்கு

- ஒரு சோடி இந்தியன் குத்துவிளக்கு - 5 அடி உயரம். விலை 200,000/=.
- Computer Desktop - ACER Nitro - Intel i-7-8700 விலை 130,000/=
- Lap-Top-i-7 Dell - 220,000/=
- சோபா செற்றி 3 + 2 + 1 with pillows (வாங்கி ஒரு வாரம், மனைவிக்குக் கலர் பிடிக்காத காரணத்தால் 15,000/= குறைத்துக் கொடுக்கப்படும்) 105,000/=
- 8 அடி நீள ரியூட்டரி வாங்கு மேசை மிக நல்ல நிலை - 5 செற் - 100,000/=
- பனசோனிக் Inverter A/C, 12000u, R 410A - விலை- 180,000/= (2 வருடம் பாவித்தது புதிய விலை 229,000/=)
- ButterFly - wet கிரைண்டர் 3 கல் உள்ளது 2L - 20,000/=

6 அடி x 4 அடி நாய்க்கூடு 35,000/=
இன்றும், நாளையும் அனைத்து பொருட்களிற்கும் 10 % கழிவு கொடுக்கப்படும். (5714)

**071 803 4182 - உரும்பிராய்**

சனி, ஞாயிறு தினங்களில் மட்டும், காலை 09.00 மணிமுதல் மாலை 05.00 மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

## வைத்தியம்

கை விறைப்பு |கால் விறைப்பு |கை எரிவு |கால் எரிவு
குழந்தை இன்மை |நாட்பட்ட தலைவலி |மூலம்|கழுத்து வலி
கால் பாத விறைப்பு| முள்ளந்தண்டு வலி |முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை |வாதம் |வயிற்றுப்புண் |Gastritis |அல்சர்
மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை,
Acu சிகிச்சைகள் |அட்டாங்க யோகம் கற்கலாம்.
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669** (5729)

## உருக்குலைந்த நிலையில் கடலிலிருந்து சடலம் மீட்பு

கொழும்புத் துறைமுக அதானி முனையத்தின் படகுத் துறைக்கு அருகிலுள்ள கடலில் உருக்குலைந்தநிலையில் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் துறைமுக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, மீட்கப்பட்ட உடல் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளதால் அடையாளம் காண முடியாத நிலையில் உள்ளது. இறந்தவர் சுமார் 5 அடி உயரமும், சற்று வளர்ந்த முடியுடன் கூடிய ஆண் என நம்பப்படுகிறது.

நீதவான் விசாரணைக்குப் பின்னர், உடல் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## மலிவு விற்பனை

Canon Photocopy machine - 2004 N
49750/= மட்டுமே
ST.ANTONYS Computer
189, K.K.S Road, Jaffna.
021 222 4865 (C-4181)

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3670/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2440/- |


- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery (C-4184)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## மரண அறிவித்தல்



பிறப்பு 18 - 05 - 1961
இறப்பு 23 - 10 - 2025

### இராசையா சிவானந்தராசா

காரைநகர் மணற்பிட்டியினைப் பிறப்பிடமாகவும் 124/2, பலாலி வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா சிவானந்தராசா அவர்கள் கடந்த (23.10.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பார்வதி தம்பதியினரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற ஆனந்தராசாவின் (லண்டன்) அன்புத் தம்பியும் சர்வானந்தராசா (லண்டன்), சற்குணராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு அண்ணனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள வீட்டில் நடைபெற்றுக் காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

124/2, பலாலி வீதி,
திருநெல்வேலி. 075 964 0014 (5722)

தகவல்: சகோதரர்கள்

## மணமக்கள் தேவை

- 1993 உத்தரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த களப் பொறியியலாளர் மணமகனுக்கு மணமகள் தேவை.
- 1997 உத்தராடம் நட்சத்திரத்தில் பிறந்த உதவி விரிவுரையாளர் மணமகளுக்கு மணமகன் தேவை. (5721)

தொடர்புகளுக்கு : **074 314 5497**

## யாழ்ப்பாணத்தில் Voyzant
### விசாக்கள்



இந்தியா, அமெரிக்கா, கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, ஹொலன்ட், டென்மார்க், பெல்ஜியம், மலேசியா, நியூஸ்லாந்து, அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிற்கு விசா சேவைகள்

மேலதிக விபரங்களுக்கு: **Voyzant(PVT)Ltd**
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
+94763458646, 021 222 6866 (C-4109)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 199/= | Max 2Kg |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 229/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 280/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | Max 1Kg |
| 1Kg வெள்ளைப் பச்சை(உள்நாடு) | - 210/= | |
| 1Kg சோயா | - 330/= | |
| 1Kg தீட்டல் பச்சை ஆட்டக்காறி | - 239/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 995/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 999/= | |
| 01 அிங்கர் யோக்கட் | - 45/= ~~70~~ | |

400g Anchor — MAX 03 ~~1200~~ 1135



1Kg சன்லைட் பவுடர் — ~~320~~ 280



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும். (1674)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. **0777 8080 30**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org